26

இலாஹி

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

# தீன்மார்க்க நோன்புச் சிந்து.

இஃது

பண்ணுருட்டி டவுனைச்சேர்ந்த
ஆண்டிக்குப்பத்திலிருக்கும்
பூ. பாப்புசாயபு குமாரன்
உபாத்தியாயர் ஹக்கீம் ஞானவித்வான்
ஆ. பூ. வா. பாக்ஷாசாயபு இயற்றியதை

சமது சுன்னத்து ஜமாயத்தார்கள் வேண்டுகோளாலும்
கல்விமான்களாகிய பெரியோர்கள் முயர்ச்சியாலும்
ஆலீம்களைக்கொண்டு பிழையற பரிசோதித்து

விழுப்புரம்
ஹநுமான் அச்சியந்திரசாலையில்,
பதிப்பித்தது.

ஹிஜரி 1345ஹு சபெபாத் மாசம்
அக்ஷய ஹு மாசிமீ 11உ

இதன் விலை] ரிஜிஸ்தர் காபிரைட். [அணா 0–3–3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

# தீன்மார்க்க நோன்புச் சிந்து.

OFFICE OF THE REGIST... 2 APR

## நாயன் வணக்கம்—வெண்பா.

சீர்பெருகும் நோன்பின் சிறப்பினையான் செப்புதற்கு
கார்கொண்டுணவளிக்குங் கர்த்தனே — பாருலகோர்
பாடிஷகருக்கெழுந்து பருளான நோன்புவைக்க
நாடினே னுன் றுணையை நாளும்.

### பையத்துகள்—மசனவிராகம்.

1. அல்ஹம்து லில்லாஹிரப்பில்லா — லமீன்
   அருள்செய் யெங்கள்மீதில் மாலிக்கி எவ்மைத்தீ — ன்
2. எல்லாப்புகழும் புகட்சிவுனக்கே தருந்த — து
   ஈவிறக்கம்கிருபை வுனக்கே யுகந்த — து
3. சங்கையுள்ள ரம்லான்மாதம் நோன்பி — து
   தயவுசெய்து ஷகருக்கெழுந்தால் நல்ல — து
4. தூக்கத்தாலேநோன்பை விட்டால் பாப — மே
   துரிசாயெழுந்து ஷகர்முடித்தால் லாப — மே
5. தூங்கிடாதீர் தூங்கிடாதீர்த் தோழ — ரே
   தூக்கமேசிரு மௌவுத்தாம் நேச — ரே
6. தூக்கத்தைவிட லாபமுண்டு நோன்பி — லே
   தூங்கிடாதீர் தூங்கிடாதீர்த் தோழ — ரே
7. கையைகாலை வுதறிக்கொண்டு எழுந்தி — ரு
   கர்த்தனுரைத்த ஷக்ரோம்லான் நோன் — பிரு
8. அர்ப்பசுகமே தூக்கம் விட்டுயெழுந்தி — ரு
   அருமை பெருமை ரம்லான்மாதம் நோன்பி — ரு

9. தூக்கம்முழித்து பல்லைவிளக்கி துலக்கி டு
துய்யோன் கொடுத்த வுணவைத்தின்று நோன்பி ரு

10. அசந்துதூங்கி ரம்லான் நோன்பை விடுத்திட்டா ல்
அல்லா சமூகம் சொல்வதென்ன கேட்டிட்டா ல்

11. ராகத்திருந்தும் நோன்பை விடுக்கஞாப மா
நபிகள் நாதர்சொன்ன தீனில்கோப மா

12. பொழுதுவிடியும் நேரமாச்சே தோழ ரே
புரண்டுப்புரண்டு தூங்கலாமோ நேச ரே

13. அருமைவாய்ந்த நபிவும்மத்தாய் வந்தோ ரே
அஞ்சிப்பயந்து ரம்லான்நோன்பை பிடிப்பீ ரே

14. ஆலநபி நமக்குரைத்தார் உண்மை யே
ஆயிரமாதத்தின் வரிசை நன்மை யே

15. இசுலாமான பேர்களுக்கு வல்லவ ன்
எஃஸானுகரம்லான் நோன்பைக் கொடுத்தவ ன்

16. சங்கைவுள்ள மாதமாகப் படைத்தவ ன்
தயவுகிருபை ரகமத்துள்ளப் பெரியவ ன்

17. மேன்மையுள்ள ஷகரேரம்லான் நோன்பி து
மேலவன் வடுதாச் செய்தான் பருளி து

18. அதபுடைய ரம்லான்மாதம் தன்னி லே
அருமறையை இறக்கிவத்தான் வகியி லே

19. லவ்ஹுல் மகபூலிலிருந்த வேத மே
நபிநாதருக்கிறக்கிவைத்தான் தெரியு மே

20. ஆயிரமாதங்கள் நோன்பு பிடித்தாலு ம்
லாயக்கில்லை ரம்லா நோன்புக்கொருக்காலு ம்

21. ஆகையாலே எனதுப்பிரியத்தோழ ரே
அதமாய் ஷகரே ரம்லாநோன்பை பிடிப்பீ ரே

22. எதுக்காக குரான்ஷரிபை இறக்கின ன்
இன்ஷான்கட்கு நேர்வழியை காட்டத்தா ன்

23. இன்ஷா பான புருஹானென்றால் அர்த்த மே
இசுலாமென்றும் காபிரென்றும் பிரிக்கு மே

24. சுன்னத்துஜமாயத்தாரை வேரேயு ம்
துசுமன்பிதாயத்திகளை வேரேயு ம்

25. மெய்யைவேரேப் பொய்யைவேரேப் பிரித்தி டும்
மேன்மையுள்ள ரம்லான் பறக்கத்தரிந்திடு ம்

26. இருட்டைவேறாய் ஒளியைவேறாய்ப் பிரிக்கு மே
ஏகன்சமுகம் நோன்புகள் மன்றாடு மே

27. நபில்தொழுகால் பருள்தொழுதவரிசை யே
நாயன்சமுகம் மீக்ஷியுண்டு தெரிவை யே

28. ஏழைகட்கொருபை சாதந்தால் தோழ ரே
ஏழுநூறு காசளித்தபலன் நேச மே

29. உடையிலார்க்கு வுடையளித்தால் கேளு மே
வுடையோன்சுவர்க்கத் துகில்கொடுப்பான் நாளு மே

30. பாபம்நினைத்து கெஞ்சித்தௌவ்பா செய்திட்டா ல்
படைத்தோன் பொருப்பான் ஷஹ்ரேரம்லான் பாக்கத்தால்

31. நோன்புதிறக்க வொருமுணர்நீர் கொடுத்திட்டா ல்
தான்கொடுப்பேனென்றுணபியின் பாக்கத்தா ல்

32. பாய்மார்களே தாய்மார்களே கேளுங்க ள்
பரக்கத்தானரம்லான் நோன்பைப் பிடியுங்க ள்

லாவணி மெட்டு.

1 ஆதியிறையோன் திருத்தூதரி றசூல்நபி அகம்மதர் வைத்த
நோன்பு அதை விரும்பு ஷகரே ரம்லான்
அருமைப்பெருமை நம்பு

2 ஆண்பிள்ளையாய்ப் பிறந்தும் நோன்பென்றறிந்திருந்து ம்
அறியாமல் விட்டுவிட்டாயே தூக்கத்தால் கெட்டா யே
நபிவும்மத்தாய் அடையாளவேஷமிட்டா யே

3 முப்பது நோன்பிருந்தால் வுடலிளைத்துப் போகு மோ
மூடா அப்படியல்ல மிருகமல்ல நோன்பை விடுத்தோ ர்
முகம்மதரும் மத்தல் ல

4 அந்துவேளைத் தொழுது அதபாய் நோன்பைப்பிடித் து
அண்டை அய்யலுள்ளோரை ஏழையானே றைய்
நோன்பாளிகளை ஆதரிப்பீர் தீனே ரோ

5 ஒருநோன்பாளிக்கி நோன்புதுறக்கவுண வளித்தா ல்
வுடையோனசிபு செய்வானே சுவனத்தில்தா னே
வேணநியாமத்து வுனக்களிப்பே நானென்று னே

6 ரம்லான் மாதத்தின்புகழ் பரக்கத்தெடுத்துரைக் க
நாவு ஆயிரம் போதுமா வுறக்க ஏலு மா
கூலிகொடுக்க நானென்றுரைத்தான் ரகுமா ன்

7 தப்பிதம் செய்திடினும் ஒப்புமபாருப்பானென்று தாகாந பி
வுரைக்கலு இமாம்கள் சொன்னது சந்தேகமில் லே
ஷகர்செய் நோன்பை பிடித்திடு ம்

8 ஆரைந்துநோன்புநாளில் பகலில் திண்டி திண்ணும ல்
அதபாய்நோன்பை பிடித்திடு பஜர் தொழுதிடு ம்
வுள்ளத்தைக்கொண்டு ஆத்மதிர்த்தியா வுண்டி ரு

9 நோன்புகாலத்தி லொருபைசா தருமஞ்செய்தால் ஏனைக் க
மெழுநூறுபைசா கொடுத்ததறஜா கிடைக்குமென் று
ஆறுமுகம்மதுரைத்தா ர்

10 ஆயிறமாதஞ்செய்த வணக்கமீடுகட்டாது அரு மை
ரம்லானேர்மாதம் றகுமான்வேதம் நபீமுஸ்த் பா
அவர்கள் வுரைத்தபோ தம்

11 உள்ளதுள்ளபடியே மனம்வாக்குகாய மொத் து
உகப்பாய்ஷகரைச் செய்யுங்கள் நோன்பைப்பிடி யுங்க ள்
பஜர்தொழுது யொருவன்சமுகம் கெஞ்சுங்க ள்

12 கிள்ளைப்பலபக்ஷிகள் சிலிம்பிப்பாடியாடுது கிழக்குத்தி சை
வெளுக்குது நிலந்தெளியுது ரம்லானென்றெண் ணி
கிருபைவுடன் எழுந்தி ரு

13 வஞ்சியர்மையல் கொண்டு மயங்கிதூங்கிவிடாம ல்
வரிசை ரம்லானென்றெண்ணிடு தூக்கமுழித்திடு ம்
ஷகரையுண்டு வல்லவனைப்புகழ்ந்தி டு

14 கோடையிடிபோல் பள்ளிவாயலில் பாங்கு சத்த ம்
கூரும்வேலை நெருங்குது விடிந்துபோகு து
தாமதமென்ன குறஸிஙபிசொல் தீனி து

15 அருமைஷகறோம்லான் பெருமை எடுத்தெழுதவென்று ல்
யாருல்வர்ணிக்கக்கூடும் யிமானில்நாடும் அருமை என்ன ல்
அரிந்ததைச் சொன்னேன் தேடு ம்

16 அருஙமகட்கிறங்கியே ஷகரோ ரம்லானளித்தா ன்
அல்லா முகத்தைப்பாருங்கள் றசூலைப் பாருங்க ள்
ஆலிமுலமா அருளும் தப்ஷீரைப்பாருங்க ள்

17 பாடிப்படித்தோர்கேட்டோர் பருளென் றுநோன்புவைத்தோர்
பாமனருளால்வாழ்க பாலர்கள்வாழ்க தீன்மார்க்கநேச ர்
பசூஹுடனே வாழ் க

## இங்கிலீஷ் நோட்டு.

1 ஷகறொம்லான்பிறை கண்டோம்
சலவாத்துரைத்தோம் மகிழ்கொண்டோம் [தனியோன்
தயவுடையோன் பௌவம் பொருப்போன் தனியோன்
நினவாலறிந்திடு ஷகரோம்லான் பிறை

2 ரம்லான் நோன்பின் பிறை கண்டோம்
நாம்செய் பாபமெலாம் வென்றோம்
நலந்தருவான் பலன்தருவான் நாயன் நாயன
நபிவத்த நோன்பிது : ஷகரோ

3 ஆயிறமாதம் நோன்பைவிட அதிக பலனே ரம்லானே
தாயினுமெழுபது பங்குடையோன் தனித்தோ
னுரைத்தா நபிக்கெனவேதமே ஷகரோ

4 காசொன்றளித்தாளெழுநூறு காசு கொடுத்தபலன்கூறு
னுசொன்றளித்தாளெழுநூறு னுசளித்தோனெனப்
பேசுவார் வானவர் ஷகரோ

5 ஒருநோன்பாளிக்குணவளித்தால் யுடையோன் சுவர்க்கத்
தமுதளிப்பான் அரிவாய் தெரிவாய் முகம்மதரும்
அரைந்தார் யரைந்தார் மனுஜின்கள் காணவே ஷகரோ

6 ஒன் றுக்கெழுநூர் தந்த பலன் வுடையோன் யொருவன்
தருவான் கிருபையுடன் நன்றுய்ச் சொன்னு நபியிறசூல்
நன்மை நன்மை தின்மையோடு விலக்கிடும் ஷகரோ

7 நோன்பு துறக்கயொருமுளர்நீர் தான்கொடுந்தோர்க்கு
தாம்தருவேனென்றிவா யுரைத்தான் [ஜம்ஜம்நீர்
ஆனதிலரிவாய் தெரிவர் பிறை ஷகரோ

8 ரம்லான் நோன்பை பிடித்தவர்க்கும்
நன்றிவுதவி செய்தவர்க்கும
எஜமான்கூலி கொடுப்பதுவாய்
எஃஷான் எஃஷான் யிரைவன்கூறிய ஷகரோ

9 முப்பது நோன்பும் பிடித்திடுவோம்
முன்ஞேனேவலெடுத்திடுவோம்
தப்பிதம் செயல்களை விட்டிடுவோம்
தனித்தோன் தனித்தோன் வுரைத்திடும் மார்க்கமே ஷக

10 வானோர் புகழும் மாதமிது வரிசையுடைய மாதமிது
தீனோர்போற்றும் மாதமிது திக்களெழுந்து
விளங்கிய தோத்தமே ஷகரோ

11 சொல்லும் செயலுமற்றவனே துறசமீபமற்றவனே
அல்லும்பகலுமற்றவனே ஆண்பெண்ணவியிலா
காண்பவன் சொல்லிய ஷகரோ

12 மயிலாய் முத்தாய் கிந்திலாய் வல்லேயொளியாய் நபியாகி
புவியோர் வாழ்த்த மக்கநகர் புரந்தோர் சிரந்தோர்
புனிதர் நபிசொன்ன ஷகரோ

13 நாடிஜக்காத்தியந்திடுவீர் நபிகள் ஷறகை பின்தொடர்வீர்
தேடி தீனைப்படித்திடுவீர் ஜெயமே ஜெயமே
நயமுள நோன்பிது ஷகரோ

14 லாபம் பெருவீர் மறுமையிலே நாயன்தீதார்கள் பிணிலே
பாபம் விலகும்பருள் நோன்பால் பாய்மார் தாய்மார்
யாவர்க்கும் தோனுது ஷகரோ.

(புள்ளிக்கலாமயில் பாகன்—என்ற வர்ண மெட்டு).

1 முப்பதுநாள் நோன்பிருந்தால்நாமே—முழுப்
பாவமும் தொலைத்துவிடலாமே—நமது
மூகம்மதிறசூல் நபியும் ஜெகமதிலுரைத்த வார்த்தை
முந்து குபிர்பித்து.

2 ஒருமாதம்னோன்பிருந்தால்— நாமே
ஒரு வருஷம் பிடித்தப்பலனுமே என்று—வும்மி
நபிசொன்னவார்த்தை—நன்மை யென்றறிந்தவர்க்கு
வுண்டு ரம்லான் கொண்டு.

3 கண்டிருந்தும் னோன்பை விட்டிடாதே—கடுங்கா
பிரைபோல் பகலில்தின்னாதே—நமது
கர்த்தனபிஉரைத்ததை—சித்தத்தில்மாந்திடாதே
காணு தினைப்பேணு.

4 வேதமிறங்கினது இம்மாதம்—நோன்பை
விரும்பிபிடித்தால் பாவங்காதம்—பகலில்
வெத்திலைப்பாக்குத்தின்னாதே குத்தமட நோன்புநாளில்
வெட்கம் சொன்னால் துக்கம்

5 துக்கமுண்டு நோன்பை விட்டபேர்க்கு —றசூல்
சொற்செயலைவிட்ட பாதகருக் நாயன்—சோதனைக்குனை
விடுத்த சேதியை மறந்திட்டாயோ
சொல்லு இதிலேன் மல்லு.

6 ஏழைக்கொருபைசாகொடுத்தால்—நாயன்
எழுநூருபைசா கொடுத்தோனெனத்தான்—சொன்ன
எவலை மரந்திடாதே சாவதுண்மை யாகையாலே
எண்ணு ஷகர் பண்ணு.

7 தூங்கிவிட்டால் நோன்புநாள் கிட்டாது—மகுசர்
சொல்லிதொலைக்க நம்மாலாகாது—வல்லோன்
சொன்னச்சொல் தவரமாட்டான் மன்னவர்க்கு மன்ன
தூய்யோன் யார்க்கும் மெய்யோன். [னவன்

8 ஆதத்தைக்கொடுத்தாணீபுலீசு—அவர்
அவுலாதுகளைக்கெடுப்பான் சூதுநமது அன்னையை

மாத்திபல்லோ தின்னச்சொன்னான் கோதும்பையை
அரிவாய் சேதித் தெரிவாய்.

9 பாங்குசத்தங்கேட்டு முன்னே ஷகர்செய்— பள்ளி
வாயலுக்குச் சென்றுபஜர்செய் செய்தோர்—பாபங்கள்
பரந்துவிடும் கோபங்கொள்ள வேண்டாம் சொன்னேம்
பாரு தீனில் சேரு.

10 சங்கையுள்ளாம்லான் மாதமென்று எண்ணி—ஷகர்
செய்து நோன்பிருந்தால் நன்று—கோடி
தப்பிதங்கள் செய்திடினும் ஒப்புகொள்ளுமாதமாச்சே
தன்மை ரம்லான் நன்மை.

11 நோன்பிருந்தானுடனிளக்குமென்று ஷகர்—தான்
விடுத்தாரோப்பகலில் தின்று—பின்னம்
நூருவருஷமிருக்க கோரி விடுத்தாரோ நோன்பை
துளையா இனைப்புலையா.

12 இபுலீசவும்மத்தாகப்போகாதீர் நோன்பை—எப்படிப்
பிடிப்பதென்றெண்ணுதீர் யொரு—எள்ளளவேனும்
பிசகி சொல்லவில்லை நபிநாதர்
ஏர்ப்பீர் தீனை பார்ப்பீர்!

13 பார்த்துநடக்கமதி தந்தானே—நபி
பயஹறம்பரையுமனிப்பினுனே அந்த—பாதுஷா
சொல்லைமறந்து மாத்சமாய் நடந்திடாதே
பாவம் யிறைபோன் கோபம்.

14 கூவிச்செல்வோம் கோபங்கள் கொள்ளாதீர்—துபான்
குற்றங்கூறி யெங்களைப் பேசாதீர் நமது—குருநபி
சொன்ன மார்க்கத்தை மருபடியும் சொல்ல வந்தோம்
குணமாய் தீனை மணமாம்.

15 நோன்புபிடித்தோர்க்குகூலி நானே—சுவர்க்கம்
தான் கொடுப்பேனென்றுன்ரகுமானே—சொன்ன
ஞேக்கத்தை தெரிந்திடடா தூக்கம் விட்டெழுந்திரடா
நோன்பு அதை யோம்பு.

16 நோன்பைவிட தூக்கம் பெரிதாச்சோ—றசூல்
தானுரைத்ததின் விருதாப்போச்சோ—நமது
தூருமுகம்மதிறசூல் கூறியபடி அமல்செய்
துணுக்கம் தீனோரிணக்கம்.

17 ஷகறே றம்லான்மாதம் தூங்கிடாதே—பகலில்
தான்புசிக்க தவறியக்கொள்ளாதே—நமது
ஷைய்யகிறசூல் நபிவும் வையமதில் வந்தவிதம்
சாற்று தீனே போற்று.

18 நோன்புவத்தபேர்க்குப் பலனுண்டு ஷகர்—நோன்பை
விட்டோர்க்கு ஜெகன்னமென்று கர்த்தன்—றாதன
மரையிர்ச்சொன்ன சேதியை மறந்திட்டாயே
கொள்ளே படு சள்ளே.

19 ஏழுநரகங்கள் மூடப்படுமே வானில்—எட்டு
சுவர்க்கங்கள் திறந்திடுமே வுந்தன்—இச்சைப்படி
விட்டிடாதே பக்ஷமாய் ஷகர்செய்திடு
இன்பம் தீனே நம்பும்.

20 ஷைய்த்தான் கால்களுக்கு விலங்கிடுவார்—நோன்பின்
சங்கைக்காக வானவர் கொண்டாடுவார்—கோழி
சாவலுங்கூவுதடடா ஏவலுக்கெழுந்திறடா
ஜண்டி ஜக சண்டி.

21 ஓர் நன்மைக்காயிற நன்மையென்று—நாயன்
வுரைத்ததிமெறையில் கண்டு—இன்ஷான் திருமறை
ஒப்புக்கொள்ள நபிநாதர் இப்புவியில் வந்தவேதர்
வுன்னு மௌலூத்தை எண்ணு.

22 பொழுது விடியுந்தருணமாச்சே சற்றும்—புத்தியத்து
தூங்கிவிட்டால் போச்சே—யிந்தப்
பூதலத்திலேவிடுத்த நாதன்முன் பதிலென்சொல்வாய்
பொய்யா வாழ்வு மெய்யா.

23 பாவியடியானுரைத்தப்பாடல் தன்னில்—பழுது
பிசகேதுரினும்மூடல் தீனோர்—பக்ஷமாய்
திருத்திக்கொள்ள லக்ஷந்தரம் வேண்டுகிறேன்
பாரில் கண்ட வூரில்.

நினைப்பதெப்போது நெஞ்சே—என்ற வர்ணமெட்டு.

ஷுகருக்கெழுந்திடீரோ தீனோர்களே
ஷுகருக்கெழுந்திடீரோ.

1 அகம்புறமறிந்தவன் அருளியவேதம்
ஆலநபிப்பறக்கத்தால் வந்தமாதம்
இகபரமிரண்டுக்கு மிதுநல்லபோதம்
எழுந்திருந்துமே ஷுகர் செய்திடீதம் ஷுகருக்கே

2 வான்புவிபடைத்தவன் வகுதாச்செய்தானே
வலுப்பமுடையஷுகர் ரம்லானென்றானே
ஞானமெனுமறிவை நமக்களித்தானே
நரஜென்மமாவுலகில் நமைவிடுத்தோனே ஷுகருக

3 பிறந்தநாள்முதல் சாகும்வரை துன்யாபாடு
பிணமாகிவிட்டால்வருமோ ரம்லான்தேடு
மணமானநோன்பைவிட்டா லிதுவெட்கக்கேடு
மன்னிப்புண்டாகும் நோன்புமாதத்தை நாடு ஷுகரு

4 ஆயிரம்மாதனேன்பு பிடித்திருந்தாலும்
ஆனைந்துநோன்புக்கிணை ஆகாதெக்காலும்
நேயமாஷுகரிற ரம்லானிதைப்போலும்
நிகரில்லையென்று நபிநாயகம் சொன்னதாலும் ஷுகரு

5 ஒன்றுக்கெழுனூறாக வுதவும்ஜக்காத்து
உங்கட்களிப்பேனென்றான் வுண்மையாய்ப்பார்த்து
நன்றுயஷுகரே ரம்லாநோன்பதைநோற்று
நாளொன்றுக்கைந்துநேரம் தொழுகைபின்பற்று ஷுகரு

6 தீன்குலத்தில் பிறந்தும் நோன்பைவிடாதே
ஜெகதசர்க்குருநபி செப்பும் கதிதே
நாளுமிசுலாமென்று நடனஞ்செய்யாதே
நல்லநாள் ரம்லானேன்பை பிடிக்கமறப்போதே ஷுகரு

7 ஜகன்னமெனும் நரகம் திறவாதமாதம்
ஷைய்த்தான்ஜின் கால்களுக்கு விலங்கிடும் மாதம்
பகலிரவறியாமல் பலன்தருமாதம்
பணியாதமக்கள் செய்தப் பவந்தீரும்மாதம் ஷுகரு

8 அஞ்சு[illegible] மூன்றும்பருவிது [illegible]ன்பு
அலக்ஷியமா[illegible] நிருந்திம்பு
சந்நோரமாகுது ச[illegible]கிளம்பு
தாமதிக்காதேசேவல் கூவுதாங்காங்கு ஷகரு

9 நோன்புநாளையில் பகல்தின்டி தின்னாதே
நுளைத்தனமாவெத்திலை பாக்குப்போடாதே
சாண்வயத்தை கட்டாமல் நோன்பை விடாதே
தடித்தனமாய்ச்சுருட்டு குடித்துவேகாதே ஷகரு

10 மருந்துதின்றால் பத்தியம் வேண்டுவபோலும்
மாதம்ஷகறே ரம்லா னிருங்களைக்காலும்
தெரிந்திருந்தும்நோன்பை விடாதேமுக்காலும்
ஷெய்யகிறசூல்நபி செப்பியதாலும் ஷகரே

இத்தனைத்தாமதமேதையா எந்தனையாள என்ற வர்ணமெட்டு

முப்பதுநோன்பிதுகாணும் ஷகறே ரம்லான்
முழுதும்பிடிக்கவேணும்
விர்ப்பனவிவேகமுள்ள வேதர்நபிபூதலத்தில்
கர்ப்பனைசெய்திட்டப்படி கணக்குடன் முப்பதுநாள்
[முப்பது.

1 அண்டர்கள்மகிழும்மாதம் பல்லுயிர்களும்
கொண்டாடிடும் ரம்லான் மாதம்
ஒன்றுக்கெழுநூறுமாதம் தூக்கம்முழித்து
நின்றுவணங்கிடும் மாதம்
தொண்டர்கள்புகழும் மாதம் தூவோர்மகிழும் மாதம்
கண்டவர் [illegible]லிதீர்ந்திடும் காக்ஷியுள்ள ஷகறே ரம்லான் முப்பது

2 ஒன்றுக்கெழுநூரு என்றானே நோன்புநாளையில்
நன்றாக வணங்கச் சொன்னானே
தின்றுகொழுக்காதே யென்றானே வனதாத்தப்
சண்டினால் சுவனமென்றானே
கண்டிருந்தும் ரம்லானோன்பை கருதிப்பிடித்திடாமல்
பன்றியைப்போல் பகலில்தின்னும் பாவிகளே கூவிச்செல்
[வோம் மு

3 ஆதியிறையோன் சொன்னானே சகமத்துள்ள
மாதம் ரம்லான் மாதமென்றானே
சூதையரிந்திடத் தானே அறஷிலேரும்
ஆதரும்மத்தாய் வந்தோமே
பாதையறிந் துணர்ந்து பயகம்பர் சொல்லைப்பேணி
நீதியுள்ளஷகறெ ரம்லான் நேசமாய் பிடித்திடுவோம் முப்

4 எட்டுசுவனந்திறப்பார்கள் வானலோகங்கள்
எல்லாமலங்கறிப்பார்கள்
கட்டளைப்படிமுடிப்பார்கள் நரகமேழும்
கடிதில் மூடிவிடுவார்கள்
மட்டத்தசங்கையுள்ளமாதம் ஷகறே ரம்லான்மாதம்
சட்டத்தைபின்பத்தென்று சைய்யதிறசூலுரைத்த முப்பது

5 பகலில்புசிப்பது ஹறாம் தண்ணீர்குடித்தால்
பன்றிரெத்தத்தினிகரும்
சகலபாபங்கள் செய்தோராம் நோன்பைவிடுத்தோர்
சண்டாளரிற்ச்சண்டாளரும்
இகபறமிரண்டையு மெடுத்து நமக்குறைத்த
முகம்மதுமுஸ்தபாசொல் முழுதும் பழுதிலாத முப்பது

6 நோன்பாளிகளானோர்க்கு ஒருமுணர் நீர்
தான்கொடுத்தாலவர்க்கு
நான்கொடுப்பேன் சுவர்க்கா நிகுமதென்று
தானுரைத்தானே ஹக்கன்
ஞானமுடையதீனை நம்பிடாமல் யம்புவியில் [முப்பது
கேணையைப்போல் நோன்பைவிட்ட கேடுகெட்ட மூடர்களே

7 நோன்புபிடித்தாலிளைந்து விடுமோமென்று
தான் பயந்திரோகளைத்து
மானபிமானம்விடுத்து கூத்திலேவேஷம்
தான்போட்டதுபோல் நடித்து
தினில் பிரந்திருந்தும் செயல் மாரிச்செயல்செயும்
வீணர்களெ அல்லாறசூல் விளம்பியஷகறெ ரம்லான் முப்

8 உடம்புராகத்தாயிருக்க நோன்பைவிடுத்த
திடம்பாடென்னமோ தருக்க
இடம்பொருனேவலிருக்கப் பகலில் நிண்டி
மடம்புகும் நாய்போல்பொருக்க
கடத்தைச்சதபாயெண்ணி கர்த்தனேவல் நட்டிவிட்ட
மடத்தனமாந்தருக்கு வள்ளால்நபிசொன்ன ரம்லான் முப்

9 கோழிக்குஞ்சுகள்கூவுது பக்ஷிகளெல்லாம்
குலவிச்சிலம்பிபாடுது
ஆழியலைகிளம்புது தவஞ்செய்வோர்கள்
அகங்களெல்லாஞ் சொலிக்குது
வாழ்வளித்தோனைபோற்றி மனநாறநோன்பிருந்து
ஏழைகட்கிறங்கினோர்க்கு இன்பமுண்டு துன்பமில்லை முப்

ஆறுமுகவடிவேலவனே—என்ற வர்ணமெட்டு

1 ஷகரோம்லான்மாதம் நோன்பு பிறந்தது
சல்திமெழுந்திருங்கள் தீனோர்
பகலில்தின்பதே ஹராமென்றுச் சொன்னப்
படிக்கிபயப்படுங்கள்

2 முப்பதுனோன்பும்பரு ளென்றுரைத்தான்
முழுதுமரிந்தயிரை கல்பு
ஒப்பிக்கலிமாவை செப்பியவாறு
வுணர்ந்து செய்வீர் ஷகரை

3 ஏழைகட்கோர்பைசா தந்தால் யன்னோர்க்கு
எழுநூறுகாசிபலன் சொர்க்க
வாழ்வில் கொடுப்பதாய் நாயனுரைத்த
வரிசையரிந்தால் நலன்

4 ஷகறே ரம்லான்மாதம் நோன்பாளிக்கொருமுனர்
தண்ணீர்கொடுத்தோர்க்கு சுவன
கௌவ்லல் கௌவதர் தண்ணீரளிப்பேனென்று
கர்த்தன் சொன்னான் யார்க்கும்

ஆண்டை அயலிலுள்ள ஏழைமிஸ்கீன்கட்கு
அன்னமாடையளித்தால் நாயன்
ஒன்றுக்கு ஆயிரம்தருவதாச் சொல்லிட்டான்
உம்மிநபி பொருட்டால்

6 உடலிளைக்குமென்று நோன்புவைக்காமல்
வளவுகள் பேசாதே நமது
கடமென்ன கற்கண்டோ வுயிரென்ன இக்கிப்போ
கருத்தை மாக்காதே

7 வல்லோனுக்கிணைவைக்கும் காபிரைப்போலே
வழிகெட்டுப்போகாதே கேட்ட
தெல்லாந்தந்தானு மிறைசொன்ன வேவனுக்
கிடமொன்றும் பேசாதே

8 ஆயிரமாதங்கள் நோன்பிருந்தாலும்
அருமைமாம்லான்மாதம் நோன்பு
பாயிதாவுக்கிணை கட்டாதுயென்று
பயஹம்பர் சொல்வேதம்

9 கிழக்குவெளுக்கிது பக்ஷிகள்பாடுது
கிளம்பிசெய்வீர் ஷகரை வீணாய்
உழக்கில் வடக்குகிழக்கென்று பேசாதீர்
வுகந்துசெய்வீர் ஷகரை

10 பக்ஷிகள் பாடுது நிலமும் தெளியுது
பயந்துசெய்வீர் ஷகரை சோத்துக்
கிச்சைக்காசைப்பட்டு நோன்பை விடாதீர்கள்
எழுந்துசெய்வீர் ஷகரை

11 சூடுமிகுந்து வுடலிளைக்குமென்று
தோகையர் சொல்லிடுவார் அந்தக்
கேடிகள்சொர்க்கேட்டு நோன்பை விடுக்காதே
கேவலமாக்கிடுவார்.

12 பெண்வார்த்தை கேட்டதாலாதம் நபியும்
பெருமைகுலைந்தழுதார் வுந்தன்
எண்ணத்தை மாத்துவாள் நோன்பைவிடச்சொல்லி
ஏமாறாதே பழுதா

13 நபிகள் சிகாமணி முகம்மது முன்தபா
நாயனறஷேரி தீனைப்
புவியில் கொண்டுவந்த யருமைத் தெரியாமல்
புலம்புகிராய் தோஷி

14 அல்லாரசூல்சொன்ன வார்த்தையைநம்பி
அதபுடன் நோன்பிருந்தால் அர்ப்ப
பொல்லாங்கும் வாராது சுவர்க்கங்கிடைத்திடும்
பொருமையது மருந்தாம்

15 தூக்கம்பெரிதல்ல நோன்புநாள் கிடாது
தூருசாயெழுந்திருங்கள் சர்வ
ஆக்கமுல் ஹாக்கிமீன் நபிநாதரும்மதத்தாய்
ஆவதைத்கோதிடுங்கள்

16 ஆருக்குநோன்பில்லையென்றால் நோயாளிக்கும்
அயஸ்நிபாஸ்பெண்களுக்கும் மரு
வைருக்குகால்நடை வெயலில் நடப்போர்க்கும்
வுணர்விலா வெரியருக்கும்

17 மையனர்த்தெளியாத சிறுபிள்ளைகட்கும்
மனும்நோன்பெனவுரைத்தான் நோன்பின்
பையனையரிந்து பருளான நோன்பென்று
பயந்து நடந்திடுங்கள்..

நம்பினேனு நூங்கள் பாதமே என்ற வர்னமெட்டு.

அருமையுள்ள ரம்லாநோன்பிது ஷகர்செய்யுங்கள்
அல்லாறசூல் சொன்னதீனிது
கருவிலுருவாக்கிவைத்த காறணன் நபிக்குரைத்த
பெருமைசேர் ஷகரே ரம்லான் பேணியேமனங்கோணுமல் அரு

1 பாபமடங்கலும் பொருப்பான் நசல்பிடிகள்
பலவிதபலாய்கள்யழிப்பான்
கோபங்கள் வாராமல்தடுப்பான் குத்தங்குறைகள்
கொடியவல்வினைகள் யொழிப்பான்
நீ பகலிலே தின்னுமல் கியாபகமாய் நோன்பிருந்து
நாவுமாபத்லைதயும்பேணிமேவியெஷகறருந்து அருமையுள்ள

2 வல்லவன் குருனிர்ச்சொன்னானே முப்பதுநோன்பும்
வரிசையாய் பிடித்திடத்தானே
செல்வமும்வளருமென்றானே நபிசொற்படி
செய்தவரிசுலாமென்றானே [தால்
சொல்லொணாப்பாவம்விலகும் தொழுகையோடுநோன்பிருந்
நல்லநாள் நல்லநாள்யிதுநம்பியே ஷுகர்செய்யுங்கள் அருமை

3 வேதமிறங்கினமாதமெ சுவர்க்கமெட்டும்
வேடிக்கைசெய்திடுமாதமே
மாதவம்பெருகும்மாதமே ஜெகன்னமேழும்
வன்னெருப்பவியும் மாதமே
ஆதிரசூல்நபியும் துய்யவனறஷிலேரி
ஆதியிறையோடுபேசி அவனிதனில் வந்தமாதம் அரு

4 ஏழைகளுக்கொருகாசளித்தால் ஆயிரம்பைசா
இட்டவர்பலனென்றுரைத்தான்
தாழ்வடையா நோன்பிருக்கத்தான் நபிகள்நாதர்
தானுரைத்தார் நன்மை செய்யத்தான்
வாழ்வைமதித்து தூங்காதே மறதியாய் நோன்பைவிடாதே
கீழ்திசை வெளுக்குமுன்னே கிருபை செய்தெழுந்திருங்கள்
அரு.

5 ரம்லானோன்பை பிடித்தப்போர்க்குத்தான் சொர்க்கத்தில்
நான் கொடுப்பேனென்றெயுரைத்தான் [கூலி
அருமையாய்ப்பொருமைசெய்யத்தான் ஆதமக்கட்கு
ஆனைந்து நோன்பையும் விதித்தான்
மமதையொடுங்குமிபுலீஸ் வாயொட்டாமலேதடுக்கும்
சமதாய்நிறைந்தோன்சமுகம் தாழ்விலாமல்வாழ்ந்திடுவாய்
அருமையுள்ள

6 ஒருநோன்புபிடித்தபேர்க்குத்தான் ஆயிரம்நோன்பு
வொக்குமென்றிறைவோனுரைத்தான்
அருமைரம்லான் மாதமென்றிட்டான் மனுஜின்கட்கு
அகம்மதுநபியால் சொல்லிட்டான்
இருவினைவாய்ச்சந்திரனை யிவ்வுலகிலேயழைத்த
குருமுகம்மதுமுஸ்தபா கூறினசொல்மாறிடாதே அருமை

7 சண்டிபோல்தூங்கிக்கிடக்காதே ஷகர் செய்யாமல்
தாமதித்துறங்கிவிடாதே
பன்றிபோல்பகலில்தின்னாதே நரகநெருப்பால்
பாவிகாள் வயர்வளர்க்காதே
வண்டனிபுலீசுடைய மாயத்திலகப்படாதே
கண்டிப்பாய்ஷகர்செய்திடு கர்த்தன் சொன்னவுத்திறவு அ.

8 தாமரைமலர்கள் பூக்குது பக்ஷிகள்பாடும்
சப்தங்கள் காதுகள் கேட்குது
மாமறைபுருஹான் சொன்னது முப்பதுநோன்பும்
வரிசையாய்ப்பருளென்றுனது
ஏமாறிடாதே தூக்கத்தால் யின்பமானநோன்பைவிட்டு
பாமானாகதே சம்லான் பகலில் திண்டிதின்பதாம் அரு.

9 ஆக்ஷியாவுலகை யாள்பவன் பல்லுயருக்கும்
ஆயுளுமிரணந்தந்தவன்
சாக்ஷியாய் கண் காணிப்புள்ளவன் மனுஷகர்வேலை
சகலமும் விசாரித்தாள்பவன்
மோக்ஷசாஸனந்தந்தானும் முகம்மதிரசூல் மார்க்கத்தை
தீக்ஷண்யமாபாடிவிட்டேன் சீக்கிரம்யெழுந்திருங்கள் அரு.

பாரோர் புகழ்ந்திடும் பண்டரீ என்ற வர்ண மெட்டு.

1 ஷகறோம்லானெருமாதமே பகலில்தின்பது ஹராம்
சத்யபுருஹான் சொன்னது நபிமுகம்மதுமுஸ்தபா
வில்தாறமாய்புகன்றது நாளும்
தனியோனேவலினிமையாகவே மனமுவந்து நீதினமெழுந்திடு
ஜல்தியாய்ஷகர்செய்திடு பஜர்வேளைநெருங்குது
சங்கையாய் நோன்பைவைத்திடு

2 பாங்குசத்தம்முழங்குது தூங்கிவிட்டால் கிட்டாதது
பருளென்றறிந்து ஷகர்செய் அல்லாரசூல் வாக்கியம்
மறவாதிருந்து நோன்புவைசெய்தால்
பாபம்தீர்த்திடும் எவலாகுமே சாவல்கூவுது கோபங்கொள்ளாதீர்
பாலரெழுப்பவந்திட்டோம் தூக்கம்பெரிதல்லவே
ஓலமிட்டேயழைத்திட்டோம்.

3 ஒருனேன்புபிடித்திடயப்பலன் அருமைக்கீடுகெட்டாது
யொருவருஷம்பிடித்தாலும் என்றெயிரைமறைமொழி
தெரிவாய்நபிசொல்லெக்காலும் உள்ள [தூங்காதே
உணவையுண்டுநீ மணமதாகவேதினமும்நோன்பிரு பிணம்போல்
உத்தார்பெத்தாரைப்பேணுவாய் ஏழையில்லின்களை
மெத்தவுவக்தூக்காணுவாய்

4 அகமும்புறமுமரிந்திட்டவன் ஜெகமும்விண்ணும்படைத்தவன்
அக்கனிறசூல்சொன்னது ரம்லான்பிறைகண்டதும்
சொர்க்கம்திரப்பரொன்றது நோன்பி
லாசைகொண்டுமே பாசமாகவே நேசம்வைத்திட தோஷம் நீக்குமே
அயர்ந்துதுங்கிவிடாதீர்கள் பருளாகிய நோன்பிது
அதபாய்ஷகரைச் செய்யுங்கள்

5 நன்மையாகிய நோன்பிது கன்மமெலாம் விலகும்
நாயன்கிருபையுண்டுமே முன்பின்செய்பவவினை
தீயச்செயல்கள்மாறுமே வானோர் [தீர்ந்திடும்
நாகமேழையும் பெரியோன்சொர்ப்படி விாவில்மூடுவார் குறைகள்
நம்பிநோன்பைப்பிடியுங்கள் ஆரைந்தும்பருளென
நபிநாதர் நீனைத்தேடுங்கள்

6 அருமைரம்லானிம்மாதமே ஒருமையாய் நோன்புவைக்க
ஆயிறமாதப்பலனே யிறையோன் தருவானென
நாயகர்சொன்னதாகுமே ரம்லான் [செய்திட
அக்கென்றெண்ணியே ஷக்கிலாமலே மிக்கயாசையா திக்கிர்
அழல்நாகமொடுங்குமே இரையோனருளால்பல
ஆபத்தகன்றுவிடுமே.

7 மோக்ஷர்தரும்முப்பதுநோன்பிது காக்ஷித்தரும்பிடித்தாலது
மூமின்முஸ்லீம்யாவர்க்கும் தாகாநபிசொன்னதை
சீமான்யேழையனைவர்க்கு கேட்டு [நோன்பிரு
மூகங்கோணுமலே அகங்களித்துமே பகலில்தின்னுமல் சுகமா
மூன்னேன்தீதார்கிடைக்குமே நபிநாதர்ஷபாயத்து
ஜென்னத்துனக்குவாய்க்குமே.

லாயிலாகா இல்லல்லாஹூ வென்ற அக்ஷரம்-வர்ணமெட்டு.

1 சொல்லசொல்ல தூங்குகிறீர் நல்லநல்லத்தோழரே
தூக்கமுழித்துஷகர்செய் நோன்பிருந்து துய்யோன்
வணக்கம் பஜர்செய் சோதிக்கவேண்டி
ஆதம்நபியை பூதலம்பூதலமாகி விடுத்தனன் ஆகிவிடுத்தனன்

2 தப்புத்தவறில்லாதவன் செப்பிய நல்வேதமே
சாட்சியெவர்க்கும் போதமே அதீதமே
மோக்ஷலாசன நீதமே தன்னிகரில்லான்
நன்னபிக்காக சொன்னதின் சொன்னதின் மின்னமீலாதது

3 ஆயிறமாதம் நோன்புபிடித்தப்பலன் ரம்லானில்
ஆறைந்து நோன்புபிடித்தால் தருவேனென
ஆதியிறையோனுரைத்தான் நம தாலநபியும்
சீலமாச்சொன்ன கோலமே கோலமே சாலவழியிது (சொ)

4 எட்டுசுவனங்கள் திறந்து சிங்காரிப்பார்களே
இறைவனுத்தாறஞ்சீர்களே வானோர்களே
ஏவல்படி செய்வார்களே வள்ள லிறசூல்நபிக்கு
பிரியமாச்சொன்ன பருளிது பருளிது யொருமாதம் நோன்பிது

5 நோன்பாளிக்கொருமுணர்சீ தானுதவும் பேர்நட்கு
றூறுபத்துசபாபென இறையவன்
கூறும்வேதம் நிஜமென நோம்பலமரீக்கி
சோம்பல்விடுத்து காண்பது காண்பது மாண்புளரம்லானில்

6 வல்லோனறஷின்றசூல் நபியுமேரியே
வந்தமாதமேகோரியே களிமீரியே
வசனித்ததாகுமரியே வாகாகதீனை
சாகானபியும் ஏகனை ஏகனை பாகமுறப்பணி (சொல்ல)

7 ஷகரோமலாநோன்பிது நம்மைவிட்டுப்போகுது
சஞ்சலங்கள்பெருகுது கைசேதமே தனியோன்
ரகுமத்தானதுதானமைத்தாள்வோன்
வானோர்க்கரசன் ஞானமே ஞானமே யியானமுளநோன்பில்

8 ஆதியனுதியினா தூதர்வத்தநோன்பிது அலக்ஷியமல்லபாரிது
ரம்லான்மாதம் அருமைபெருமையுள்ளது நிலை
ஆகுமோர்வாழ்வு சாகப்பிறந்தோம்
ஆகையால் யாகையால் ஏகனடிமைநாம் (சொல்ல)

9 சொந்தத்தில் கூலியென்றான் நோன்பிருந்தபேர்கட்கு
துய்யோனுரைத்ததைக்கொண்டு ஹபிபுல்லா
சொன்னதீன்மார்க்கமேகண்டு தூக்கம்முழித்து
ஏக்கம்விடுத்து ஆக்கமுல் ஹாக்கின் பாக்கியமெனத்தந்த (சொ)

10 சரியல்ல நோன்புநாளில் பகலில் திண்டிதின்பது
வையதிறசூல் சொன்னது ரம்லான்மாதம்
சகலபாபம் தொலைந்தது நமது சத்யபுருஹான்
வுத்திறவாச்சே நித்தமும் நித்தமும் பத்தியமாயிரு (சொல்ல)

11 ஜகன்னம்நெருப்பை வயத்தில் புகுத்தாதீர்களே
ஷகருக்கெழுந்திடீர்களே தீனோர்களே
சங்கைபெத்து வாழ்வீர்களே மனுஷர் சமுகம்நிருத்தி
நமைவிசாரிப்போன் மமதையால் மமதையால் இனியுமாதூங்கு
[தீர் (சொ)

12 கண்டிப்பாதீன்மார்க்கத்தை தெண்டிப்பாக பத்தியே
கல்பைவிளக்கவெத்தியே நற்புத்தியே
கடைத்தேறலாகும் நத்தியே பொல்லாக் கறடணிபுலீசு
குருடன்வலையின் இருட்டனே இருட்டனே வெளிவிகிடைக்காதே ()

13 சுவனங்கொடுப்பொமென்றான் நோன்புவைத்தபேர்கட்கு
சுருதிமறையில் பார்க்கலாம் நபிநாதர்
சொன்ன தீன்மார்க்கமோர்க்கலாம் துணையிணையில்லான்
மணமானதீனை இனியேனு மினியேனும் கனிவாயரிந்திடு (சொ)

14 மாயனியுலீசுவலை மாட்டிக்கொண்டால் தூக்கமே
வந்துபிடிக்கும் பேக்கமே அதைநீக்குமே
வரிசைரம்லானை நோக்குமே உந்தன் வாழ்நாளினிணுய்
தாழவிடாதே போகுது போகுது மகோரம்லான் மாதம் (சொ)

15 உள்ளபடிசொல்லவந்தோம் கள்ளமில்லே நேசரே
உண்மைக்குகந்தத்தோழரே தாய்மார்களே
நன்மைசெய்ய பார்ப்பீர்களே உடல் ஆத்தைச்சநீரம்
காத்துதருத்தி நாத்தமெ நாத்தமெ பார்த்தரிவீர்களே (சொ)

1 அல்ஹம்ந்து வில்லா ஹிரப்பிலா அலமீனவன்
அனைத்தும்படைத்தாளுகின்ற யாறஹிமவன்
அல்லாயொருவன் தனித்தோனெல்லாம்படைத்தோன்

2 லாயிலாகா இல்லல்லாகூ நாமுரைத்தோமே
நாடுமுன்னேமூடிப்போனென்றுக் கலிமாச்சொன்னோமே
நாயகனுச்சே பல்லுயிர் தாயகனுச்சே

3 ஷகறோம்லாணமக்களித்த சாகபாச்சுதே
சகலபாபமும்பொருக்கும் ரகுமானுச்சுதே
தனியவனுச்சேவுயிர்கட் கினியவனுச்சே

4 பெருமைபெத்த ரம்லானிது பேணிக்கொள்ளுவோம்
பிரியமாகக்கண்முழித்து ஷகரைச்செய்குவோம்.
பெரியவன் கார்ப்பான் பிழையை அரியவன்தீர்ப்பான்

5 அசந்துமாந்து தூங்கிடாதீர் கிழக்குவெளுக்கிது
அல்லாஹுல்சொன்னவார்த்தை நோன்புநாளிது
அரிந்தும்விடாதே ஷகரை தெரிந்தும்விடாதே

6 ரம்லான்மாதம் பிரையைக்கண்டோம் ஷகரைச்செய்யுங்கள்
நாயனுக்குபயந்தொடிங்கி நோன்பைப்பிடியுங்கள்
நல்லநாளாச்சே பாபத்தை வெல்லும் நாளாச்சே.

7 நபில்தொழுதால் பருள்தொழுத நன்மைக்கிடைக்குமே
நல்மனதாயொன்று கொடுக்கயெழுபதாகுமே
லாபங்கிடைக்குமே ரம்லானில் பாபம் விலக்குமே

8 பாக்கத்துள்ளநோன்புமாதம் பருளென்றரிந்திடு
பகலில்திண்டிதின்னுமாசை அறவே மறந்திடு
பயகம்பர்சொன்னார் ரம்லானில் நயமென்று சொன்னார்

9 சுணங்கிசுணங்கி தூங்கிடாதே சுருக்காய் யெழுந்திரு
தோகையரைநோன்புவைக்க சொல்லிக்காட்டிடு
துன்பம்நீக்குமே ஷகர்செய் இன்பமோங்குமே

10 மணமுடைய ஷகறோம்லான் மறந்துப்போகாதே
மாதமாயிரங்கொண்டமாதம் மாத்தஞ்செய்யாதே
மறையைப்படித்திடு வுனது மனதைத்திருத்திடு

11 பருளென்றறிந்தும் நோன்புநாளில் பகலில்தின்னாதே
பாபமென்றுந் தெரிந்திருந்தும் நோன்பை விடாதே
பாவியாகாதே காபிராய் தீயில்வேகாதே

12 ஆயிறமாதம் வணக்கம்வணங்கி நோன்பிருந்தாலும்
அருமைரம்லான்மாதம்போலே யாகாதெக்காலும்
அகம்மதர்சொன்ன றசூல் முகம்மதர்சொன்னார்

13 ராகத்திருந்தும்நோன்பைவிட்டு நடனஞ்செய்யாதே
நசிபுகெட்ட காபிரைப்போல் தூங்கிவிடாதே
ஞாயமாய்ச்சொல்லு சொன்னோர்மேல் கோபமாமல்லு

14 விடிந்து ஜாமமட்டுந்தூங்கி வெழுந்துவந்தாயே
வெட்கமானம் ரோஷமெல்லாம் வித்துபோட்டாயே
வேஷங்கொண்டாயே இசுலா மாசைக்கொண்டாயே

15 தோஷியைப்போல் நோன்பை விட்டு தூங்கிவிடாதே
சுருட்டுபீடி சிகிரெட்டென்ற ஷோக்கில் போகாதே
துசுமன்னாகாதே இபுலீசு தோழனாகாதே

16 நல்லவேளை ஷகரைச்செய்து நோன்பைபிடித்திடு
நபிகள்நாதர் சொந்ததீனை நாடிப்படித்திடு
நரகம்பயப்படும் ரகுமான் சமூகம் கிடைத்திடும்

17 பாலர் நாங்கள்பாடும் வாக்கில் பழுதுவாராமல்
படைத்தவனே கிருபைசெய்வா சொல்தவராமல்
படித்தவர்வாழ்க தீன்மார்க்கம் பிடித்தவர் வாழ்க

18 நோன்பு மாதம் கண்விழித்து ஷகர்செய்தோர் வாழ்க
நோய்நொடிபலாய்வாராமல் தீனவர் வாழ்க
நோக்கி கிருபைசெய் ரஹ்மானி நேக்கிதயவுவை

19 நாங்கள் சிறுவர் சொல்லவாலே நல்லதாக்கிடு
நாடிப்படித்தோர் கேட்டோர் ஹல்பை துலக்கமாக்கிடு
ரகமத்துள்ளவா யெவர்க்கும் கிருமத்தளிப்பவா

20 அருமையுள்ளஷகரே ரம்லான் ஓடிப்போகுது
அதைநினைத்தால் கைசேதமே துயரமாகுது
அல்லாகார்ப்பவன் பிழைகளெல்லாந்தீர்ப்பவன்

21 ஒளிவுபொருந்தும் ரம்லான்மாதம் ஓடிப்போகுது
ஒருவருஷம் வுயிரிருந்தால் வந்துகூடுது
யொருவனறிவான் கய்பைபெரியோன் தெரிவான்

22 ஆகையாலே யெனதுப்பிரிய அரியத்தோழரே
அருமைப்பெருமை ரம்லான்மாதம் நோன்புவைப்பீரே
அறிந்துநடப்பீர் தீன்மார்க்கம் தெரிந்துநடப்பீர்

23 பன்றுநகரைச்சேர்ந்த ஆண்டிமாநகர்வாசன்
பலகலைதேர் நாவலர் முன் பாடிடும் நேசன்
பாஷாசாயபு வுரைத்தான் படைத்தோன்கிருபையால்

24 யாறஹிமே யாக்கரிமே எங்கள் துவாவை
அடிமைகள்மேல் கிருபைசெய்வா யுந்தன் தவாபை
ஆமினுமினே அல்லாகு மூமீன்சிமானே

மகம்மதியர்குலத்தில் மாணிக்கமாயுதித்த—என்ற வர்னமெட்டு.

1 அருமையுடையமாதம் ஷகறேரம்லானிம்மாதம்
அதிகபாக்கத்துண்டுமே யொன்றுக்காயிரம்
அல்லாகொடுப்பானென்றுமே
அருமறைதனில் குருநபிதனக் குரிமையாகவேப் பொவுரைத்தது
அந்தாருநோன்பின்பலனை எழுதவென்றால்
ஆரால்முடியுமதனை

2 ஒளிவுங்தெளிவுமுள்ள வுகந்த மாதமிம்மாதம்
வுறங்கப்போகாது ஷகரில் தூக்கம் முழித்து
உண்டுத்தொழுவீர் பஜரில்
ஒருநன்மைசெய் தருவதாயிற மினைவுரைத்தனன் புருகான்சாட்
உடலினைக்குமென்றெண்ணாதே போனல்வராது [சியே
ஆத்தைச்சரீரம் நண்ணாதே

3 மக்காநகர்ப்பிறந்த அக்கன்றிருத்தூருநம் மற்றயருகற் [நால்வரும்
ஆலசுகாயிகள் வைத்தார்நே ·பை யேல்லோர்களும்

22473

[illegible] யிரைமுன்கெஞ்சியே [ரம்லான்மாதமே
பௌவத்தைவிட்டு நீ தவத்தைசெய்திடு மறகபா
வாணின்றுவேதம் வந்திரங்கியமாதமே

4 எட்டுசுவர்க்கங்களும் கட்டளைப்படிவானோர்
இன்பமுடனேதிறப்பார் அலங்கரிப்பார்
எழுவானமும் சிங்காரிப்பார் [தர்கள்
இறவிகோடிவர் தருகிருந்தொனி வுருவமைந்தபோல் பருவமா
எனக்குனக்கென்றுமுந்துவார் நோன்புவைத்தோர்க்கு
ஏவல்செய்குவோமேன்றவாள்

5 நன்மையொன்றுநாம்செய ஆயிறம் நன்மையென்று
நாயன்குரானிற் சொன்னனே நபிநாதரை
நமக்குத்தூதாய் விடுத்தோனே [சாலஞ்செய்யாதே
நாளைவப்போமென் வேளைப்போக்காதே பாழுந்தூக்கத்தால்
நஷ்டம் நோன்பைவிட்டோருக்குப் பகலில்தின்றால்
நரகனெருப்பாமவர்க்கு

6 வானமேழுங்கடந்து கோனேன்யறஷிலேரி
வணக்கமெடுத்துவுரைத்தோர் நாயன்கொடுக்க
மகிழ்வாய் விருந்தைப்பு சித்தோர் [ஐய்யமில்லையே
வைய்யகந்தனில் துய்யோன்தூதரும் மெய்யையச்சொல்லினர்
வரிசைஷகரைச்செய்யுங்கள் அல்ஹம்தையோதி
மகிழ்வாய் நோன்பைப்பிடியுங்கள்

## அவையடக்கம்.

கணவனுர்க்கேந்திழையார் கருத்துரைப்ப
தெனபிறர்பால் களவுசெய்யும்
குணமுளான் மேலவருக்கருமைப்பதெனச்
சிரிய கொசுகுதுள்ளி
துணியுடனே கருடனுக்கு பரப்பதற்க்கு
கர்ப்பித்த சொல்லைப்போலே
பணிசுமந்தப் புவிமீதில் பெரியோர்முன்
சிரியோனார் பகர்ந்ததாமே,

---

## இலாஹி.

| | | அ. | பை. |
|---|---|---|---|
| 1. | தீன்மார்க்கதுலக்கம் | 1 | 3 |
| 2. | தீன்மார்க்கச் சிந்து | 0 | 6 |
| 3. | தீன்மார்க்க திருப்புகழ்சிந்து 1-ம்பாகம் | 1 | 0 |
| 4. | ஷை 2-ம் பாகம் | 1 | 0 |
| 5. | தீன்மார்க்க நோன்புசிந்து | 3 | 3 |
| 6. | கோஷாநாமா | 3 | 0 |

இவைகள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெத்துக்கொள்ளவும்.


இப்படிக்கு

ஆ. பு. வா. பாக்ஷாசாயபு,

ஆண்டிகுப்பம்,

புதுப்பேட்டை போஸ்டு,

பண்ருட்டி.